KFA-I-M

# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - நான்கு - ________ நேரம்: 2மணி

| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
|---|---|
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. 'இன்னல்' - இச்சொல்லின் பொருள் ____________
   அ) மகிழ்ச்சி ஆ) கன்னல் இ) துன்பம் ஈ) இன்பம்
2. 'அருகில்' - என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________
   அ) பக்கத்தில் ஆ) எதிரில் இ) அண்மையில் ஈ) தொலைவில்
3. 'மின் + அஞ்சல்' - இச்சொல்லைச் சேர்க்கக் கிடைப்பது ____________
   அ) மின்அஞ்சல் ஆ) மின்னஞ்சல் இ) மின்னுஞ்சல் ஈ) மினஞ்சல்
4. 'மாசு' - என்னும் சொல்லின் பொருள் ____________
   அ) தூய்மை ஆ) தூய்மையின்மை இ) அழுக்கு ஈ) கசடு
5. 'ஆனந்தம்' - இச்சொல்லின் எதிர்ச்சொல் ____________
   அ) மகிழ்ச்சி ஆ) வருத்தம் இ) அன்பு ஈ) கோபம்
6. 'நற்பயன்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) நல்ல + பயன் ஆ) நன்மை + பயன் இ) நல் + பயன் ஈ) நற் + பயன்
7. 'குறையாத' - என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________
   அ) நிறையாத ஆ) குறைபாடுடைய இ) குற்றமுடைய ஈ) முடிக்கப்படாத
8. 'பதிவேற்றம்' - என்ற சொல்லின் பொருள் ____________
   அ) தகவல் ஆராய்தல் ஆ) தகவல் வரிசைப்படுத்துதல்
   இ) தகவல் பதிவுசெய்தல் ஈ) தகவல் பெறுதல்
9. 'கும்மியடி' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) கும்மி + யடி ஆ) கும் + மியடி இ) கும் + மடி ஈ) கும்மி + அடி
10. 'நிழற்படம்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
    அ) நிழள் + படம் ஆ) நிழை + படம் இ) நிழல் + படம் ஈ) நிலை + படம்

**ஆ) பல சொற்கள் தரும் ஒரே பொருள்.** 5 × 1 = 5

11. ஆவல், விருப்பம், அவா ____________
12. பரவை, முந்நீர், ஆழி ____________
13. ஞாலம், வையகம், பார் ____________
14. திங்கள், மதி, சந்திரன் ____________
15. ஆதி, ஆரம்பம், தொடக்கம் ____________

**இ) ஆங்கிலச் சொற்களுடன் பொருத்துக.** 5 × 1 = 5

16. அச்சுப்பொறி - Whatsapp
17. காட்சித்திரை - Mouse
18. சுட்டி - Keyboard
19. விசைப்பலகை - Monitor
20. புலனம் - Printer

II. **அ) கடிதம் வரைக.** 1 × 5 = 5

21. உனது ஊரில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிக்கு அழைப்பு விடுத்து அத்தைக்கு கடிதம் வரைக.

**ஆ) எது சரி? எது தவறு?** 6 × 1 = 6

22. தன் சுத்தம் பேணாமை.
23. பொது இடங்களில் எச்சில் துப்புவது.
24. மழைநீரை சேமித்தல்.
25. பிற உயிர்களைத் துன்புறுத்தாமை.
26. சாலை விதிகளை மதிக்காமை.
27. பொதுவான இடங்களில் வரிசைமுறையை கடைபிடிப்பது.

III. **அ) எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.** 7 × 2 = 14

28. இணையம் என்றால் என்ன?
29. “பறவைக்கப்பல்” எனக் குறிப்பிடப்படுவது எது?
30. “பாட்டுராணி” பட்டம் பெற்ற பறவை எது?
31. நாம் பயன்படுத்திய மின்பொருள்களை என்ன செய்ய வேண்டும்?
32. மின்னஞ்சல் எதற்கு பயன்படுகிறது?
33. செயற்கைக்கோளினால் விளையும் பயன்களுள் ஐந்தினைக் குறிப்பிடுக.
34. காட்டில் நடந்த போட்டியின் பெயர் என்ன?
35. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் என்ன செய்தி இருந்தது?

**ஆ) புதிர்களுக்கு விடை தருக.** 5 × 1 = 5

36. முட்டை இடும் குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும், கூடு கட்ட தெரியாது. குரலில் இனிமை உண்டு. சங்கீதம் தெரியாது. அது யார்?
37. காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும் சங்கு. அது என்ன?
38. கருப்பு நிறம் உடையவன், கூவி அழைத்தால் வந்திடுவேன், கூட்டம் சேர்த்து வந்திடுவேன். அவன் யார்?
39. பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்திட்ட வாய். அவன் யார்?
40. பார்க்க அழகு, பாம்புக்கு எதிரி அவள் யார்?